# Introduction to Historiography

## Two Marks

**1. வரலாறு: [History]**

(i) வரலாறு என்ற சொல் 'இஸ்டோரியா' [Istoria] என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது ஆகும்.

(ii) 'இஸ்டோரியா' என்றால் வினவியறிதல் [Enquiry] என்று பொருளாகும். அதாவது வினவியறிதல் ~~என்பது~~ மூலம் கிடைக்கும் தகவல்கள் மற்றும் அறிவாக்கம் அவையனைவையே வரலாறு எனப்படும்.

**2. தாமஸ் கார்லைல்: [Thomas Carlyle]**

(i) ஸ்காட்லாந்து வரலாற்று அறிஞரான தாமஸ் கார்லைல் [1795 - 1881] என்பவர் உருவாக்கிய கோட்பாடு - வரலாற்று மாமனிதர்கள் கோட்பாடு [Great Men Theory of History].

(ii) இவர் வரலாற்றை "மாமனிதர்களின் எண்ணிறந்த சுயசாதனைகளின் சாரம்" என்றே விளக்கினார்.

**3. வரலாற்றின் தந்தை: [Father of History]**

(i) வரலாற்றின் தந்தை என போற்றப்படும் 'கிரேக்க வரலாற்று வரைவியல் முன்னோடியான 'ஹெரோடோடஸ்' [கி.மு 484 - 425] வரலாறு மனிதனை மையமாக கொண்டது, மனித செயல்கள்-சாதனைகளை பற்றி ஆய்வு என்று வரையறுத்தார்.

(ii) இவரின் வரலாற்று சிறப்புமிக்க நூல்களில் ஒன்று: கிரேக்க - பாரசீக போர்.

4. வரலாற்றின் இயல்பு: [Nature of History]

(i) வரலாறு கடந்த காலத்தைப் பற்றியது.

(ii) வரலாறு மனித செயல்கள் தொடர்பானது

(iii) இடமும் [Place], காலமும் [Time] வரலாற்றின் இரு கண்களாகும்.

5. ஹம்போல்ட்: [Humbolt]

(i) ஹம்போல்ட் [Alexander van Humbolt] [1769 - 1859] - புவியியல் தனி அறிவியல் துறையாக திகழ்வதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்.

(ii) இவருக்கு பின், வரலாற்றுக்கும், புவியியலுக்கும் இடையேயான தொடர்பு அதிகரித்தது.

6. சமூகவியலின் தந்தை: [Father of social]

(i) சமூகவியலின் தந்தை: காம்டே

(ii) சமூக வரலாற்றுக்கான மேல்பொருள்களாக கொள்ள வேண்டியதாக அவர் எடுத்துரைப்பது 'வரலாற்று சான்றுகளை' கூறுகிறார்.

7. அரசியல் வரலாறு: [Political History]

(i) அரசியல் வரலாறு மரபு வழி முக்கியமானதாகும்.

(ii) பண்டைய காலத்திலிருந்தே அரசியல் நிகழ்விற்கு சிறப்பிடம் அளிக்கப்பட்டு வந்துள்ளது.

(iii) அரசியல் வரலாற்றிற்கு முன்னுரிமை அளித்தவர்கள் ஹெரோடோடஸ், துசிடைடிஸ், கிப்பன், மெக்காலே, கார்லைல்.

8. பிரபஞ்ச வரலாறு : [Universal History]

(i) பிரபஞ்ச வரலாறு மனித உலகையும், இறை உலகையும் உள்ளடக்கியது

(ii) பிரபஞ்ச வரலாறு, இடைக்கால கிறிஸ்துவ வரலாற்றாளர்களின் கற்பனை படைப்பாகும். பிரபஞ்சத்தைப் படைத்தவன் இறைவன்.

(iii) பிரபஞ்ச வரலாறு 'உலக வரலாறு' ஆகும். புனித அகஸ்டின் பிரபஞ்ச வரலாற்றிற்கு எழுத்து வடிவம் கொடுத்தார்.

9. ராங்கே : [Ranke]

(i) தற்கால வரலாற்றின் தந்தை - ராங்கே

(ii) சார்பற்ற வரலாற்று ஆராய்ச்சிக்கான அடிதளத்தை அமைத்தார்.

(iii) கற்பனை காவிய காலத்தில் வரலாற்று தத்துவத்தின் எல்லை இவர் காலத்தில்தான் ஓய்வடைந்தது.

10. வரலாற்றின் எல்லை : [Scope of History]

(i) வரலாறு என்பது மனிதனின் வரலாறு.

(ii) வரலாறு நடந்த கால நிகழ்ச்சியை ஆராய்கிறது.

(iii) வரலாற்று முக்கியத்துவம் பெற்றவர்களை வரலாறு அடக்கின்றன.

11. கடவுளின் நகரம் : [City of God]

(i) கடவுளின் நகரம் என்ற நூலை எழுதியவர் - புனித அகஸ்டின்.

(ii) இந்நூல் 22 தொகுதிகளில் 1200 பக்கங்களில் ஆதாம் ஏவாள் செய்த முதல் தவறிலிருந்து, இறுதி தீர்ப்பு வரை விவரிக்கிறது.

12. ஹோமர் : [Homer]

(i) கி.மு. 9-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப்பெரும் கவிஞர் - ஹோமர்

(ii) சியோனன் குருட்டு அந்தகரான இவர் இயற்றிய காவியங்கள்: இலியட், ஒடிசி

(iii) 'இலியட்' டிராய் நகர மக்களிடையே நடைபெற்ற போரையும், 'ஒடிசி' மாவீரன் ஒடிசஸின் பராக்கிரம செயல்களை விவரிக்கிறது.

13. டாயின்பி : [TOYNBEE]

(i) டாயின்பி [1899 - 1975] - இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்றறிஞரான இவர் இயற்றிய நூல் - வரலாற்றாய்வு [A study of History]

(ii) 12 தொகுதிகளை உடையது. இவரின் பிற படைப்புகள்: (a) தேசியமும், போரும்
(b) கிரேக்க வரலாற்று சிந்தனைகள்

14. இபின் கால்டூன்: [Ibn kaldun]

(i) இபின் கால்டூன் [1332 - 1406] இடைக்கால அரேபிய வரலாற்று வரைவாளர்.

(ii) வரலாற்றின் பங்களிப்பு: வரலாற்றின் தோற்றம் வளர்ச்சி, பரப்பெல்லை, கலாச்சாரத்தின் தோற்றம் தத்துவம் கலாச்சார சரிவு, கலாச்சார

(iii) இவர் இயற்றிய நூல்: பிரபஞ்ச வரலாறு.

(iv) ஏழு தொகுதிகளை உடையது, மூன்றாறு 300 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது

15. ராஜதந்திரவியல் : [Diplomatic]

(i) ராஜதந்திரவியல் அதிகாரபூர்வமான ஆவணங்களை பற்றிய ஆய்வாகும்.

(ii) வழக்கமாக அரசாங்க ஆவணங்கள் குறிப்பிட்ட ஒழுங்குமுறையால் எழுதப்பட்டிருக்கும்.

(iii) ராஜதந்திரவியல் இதனை கொண்டு ஆவணங்களின் நம்பகத்தன்மை, உண்மை தன்மையை உறுதி செய்யலாம்.

16. கல்கணர் : [Kalhana]

(i) கல்கணர் இயற்றிய நூல் - ராஜதரங்கணி

(ii) ராஜதரங்கணி என்றால் அரசர்களின் ஆறு என்று பொருள்.

(iii) இவர் இந்நூலினை காஷ்மீர் மன்னர் ஜெயசிம்மர் காலத்தில் இரண்டாண்டுகளில் (1148-1150) எழுதி முடித்தார்

17. ஜதுநாத் சர்க்கார் : [Jadunath Sarkar]

(i) இந்தியாவின் அறிவியல் வரலாற்று வரைவியலின் தந்தை என போற்றப்படும் சர்க்கார் 'இந்தியாவின் ராங்கே' என சிறப்பிக்கப்படுகிறார்.

(ii) இவரது முக்கிய படைப்புகள்:

(a) ஔரங்கசீப் வரலாறு

(b) முகலாய பேரரசின் வீழ்ச்சி

(c) சிவாஜியும் அவரது காலமும்

18. நீலகண்ட சாஸ்திரி: [K.A.N. Sastri]

(i) கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி (1892-1975) - காவிரிக்கரையான் வரலாற்று சிறப்பை வெளிபடுத்திய பெருமை இவரையே சாரும்.

(ii) இவரின் படைப்புகள்:

(a) பாண்டிய அரசு

(b) தென்னிந்திய வரலாறு

(c) சோழர்கள்

19. அபுல்பாஸல் : [Abul Fazl]

(i) அபுல்பாஸல் [1555 - 1602] - அக்பரின் அரசவை புலவர் ஆவார்.

(ii) அக்பர் நாமா, அயினி அக்பரி இவரின் படைப்புகள் ஆகும்

(iii) அயினி அக்பரி 'தகவல்களின் சுரங்கம்' என்று பேராசிரியர் வூரணியா போற்றியுள்ளார்.

20. கே.கே. பிள்ளை : [K. K. Pillai]

(i) கே.கே. பிள்ளை தென்னிந்திய வரலாற்று முன்னோடிகளில் ஆய்வை வெகுவாக ஊக்குவித்த ஒருவர் ஆவார்.

(ii) இவரின் படைப்புகள் :

(i) சென்னை ராஜதானியில் தல சுயாட்சி

(ii) நாஞ்சில் நாட்டின் பண்டைய வரலாறு

(iii) தமிழ் நாட்டு பண்பாடும், வரலாறும்

21. நடுநிலை நோக்கு : [ objectivity]

(i) நடுநிலை நோக்கு (அ) பொருள் நோக்கு என்பது வரலாற்றாளர் வரலாற்றை வரையும் போது பாரபட்சமின்றி 'சமநிலை' தவறாது இருக்க வேண்டும் என்பதாகும்.

(ii) வரலாற்று நடுநிலை நோக்கு வரலாற்று ஆய்வின் மிக முக்கியம், அதே சமயம் குழப்பமிக்க

உள்ளதாகும் என்று கூறுகிறார் - 'வால்ஷ்'.

22. புறத் திறனாய்வு : [External criticism]

(i) ஹியூரிஸ்டிக்ஸ் என்ற சொல் கண்டுபிடிக்க [to find out] என்ற பொருளைக் கொண்ட ஹியூரிஸ்கின் என்ற கிரேக்க சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.

(ii) ஆவணங்களின் நம்பகத்தன்மை, உண்மைத் தன்மை கண்டறிவதே புறத் திறனாய்வு ஆகும்.

23. அடிக்குறிப்புகள் : [Footnotes]

(i) ஆய்வு கட்டுரையில் அந்தந்த பக்கத்தின் அடிப்பகுதியில் கொடுக்கப்படும் குறிப்புகளை அடிக்குறிப்பு ஆகும்.

(ii) ஆய்வு கட்டுரையின் கருத்தோட்டம் தடைபடாமல் இருக்க உதவுகிறது.

(iii) அடிக்குறிப்புகள் சுருக்கமாக, தெளிவாக, பொருத்தமாக இருக்க வேண்டியது அவசியம்.

24. நூற்பட்டியல் : [Bibliography]

(i) நூற்பட்டியல் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத ஆதாரங்களைக் கொண்ட பட்டியல் ஆகும்.

(ii) இவை முதல் தர ஆதாரங்கள் [Primary sources], பிற வழி இரண்டாந்தர ஆதாரங்கள் [Secondary sources] உள்ளடக்கியது.

(iii) நூற்பட்டியல் நான்கு வகைகளாக பிரிக்கலாம்.

25. பிற்சேர்க்கை : [Apendices]

(i) பிற்சேர்க்கைகள் ஆய்வு கட்டுரையான் குறிப்படாத விளமான ஆவண ஆதாரங்கள், தகவல் தொகுப்புகள், அனைக்கங்கள் (அ) சர்ச்சைக்குரிய விவாதங்கள் பற்றியவை.

(ii) இவற்றை நூல் ஆய்வு கட்டுரையான் முடிவில் நூற்பட்டியலுக்கு முன்போ (அ) பின்போ இணைக்கலாம்.

(iii) இவை I, II, III, IV, V ..., என்று ரோமன் எண்ணிட்டு சேர்க்க வேண்டும்.